***கவனிக்க.***- *01.06.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1762 - 2012 ජූනි මස 08 වැනි සිකුරාදා - 2012.06.08

*1762 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## *பகுதி IV(அ) - மாகாண சபைகள்*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 934 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |

***கவனிக்க.***- (i) *உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *ஹிஸ்புல்லாஹ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, மாச்சு 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(iii) *தென்னிலங்கை மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிப்பாடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, ஏப்பிறல் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

***கவனிக்க.***- *இவ்வர்த்தமானியின் பகுதி V இல் 2012 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (ஏப்பிறல்- யூன்) புத்தகப் பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*

### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, யூன் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, யூன் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆணடு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

## கலிகமுவ பிரதேச சபை

துணை விதிகள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்கவேண்டிய அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின்/126 ஆம் பிரிவின் (....) ஆம் உட்பிரிவின்கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கலிகமுவ பிரதேச சபையினால் ஒழுங்குசெய்யப்பட்ட கீழக்குறிப்பிடப்பட்டுள்ள துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்கவேண்டிய மேற்கூறிய பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாண மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன எனவும், இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் மேற்கூறிய துணைவிதிகள் கலிகமுவ பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*மஹீபால ஹேரத்,*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர்,*
*சப்பிரகமுவ மாகாண மாகாண சபை.*

*சப்பிரகமுவ மாகாண சபை,*
*புதிய நகரம்,*
*இரத்தினபுரி,*
*2012.05.08.*

## கலிகமுவ பிரதேச சபை

### எல். பீ. வாயு தகனம் செய்யுமிடத்தினை நடாத்துதல், ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்தல் மற்றும் கட்டணங்களை அறவிடுதல் பற்றிய துணைச்சட்டம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைகள் சட்டத்தில் 122 ஆம் இலக்க பிரிவின் மூலம் சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப இத்துணைச்சட்டம் கலிகமுவ பிரதேச சபையின் தகனம் செய்யுமிடத்தினை நடாத்துதல், ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கட்டணங்களை அறவிடுதல் பற்றிய துணைச்சட்டம் என அறிமுகப்படுத்தப்படுகின்றது. இத்துணைச் சட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினம் முதல் அமுல்படுத்தப்படும்.*

*2. (அ) தலைவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் இன்றி கலிகமுவ பிரதேச சபைக்குச் சொந்தமான தகனம் செய்யுமிடத்தில் எந்தப் பிரேதத்தினையும் தகனம் செய்தல் கூடாது.*

*(ஆ) மரணித்த ஒருவரின் மரணம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க வழக்குக் கட்டளைகள் கோவைச்சட்டத்தின்கீழ் நீதிவான் ஒருவர் அல்லது மரண விசாரணை அதிகாரி ஒருவரினால் விசாரணை ஒன்று நடாத்தப்பட்டு குறித்த விசாரணை முடிவில் பிரேதத்தினை தகனம் செய்வதற்கு குறித்த நீதிவான் மரண விசாரணை அதிகாரி அனுமதி வழங்கினால் அன்றி குறித்த பிரேதத்தினை தகனம் செய்வதற்கு பொறுப்பேற்றல் அல்லது தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரமொன்றினை வழங்குதலை தலைவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் செய்தல் கூடாது.*

*(இ) மரணித்த ஒரு நபரின் மரணப்பதிவுச் சான்றிதழின் 7 ஆம் நிரலில் மரணத்திற்கான காரணம் மற்றும் நல்லடக்கம் அல்லது தகனம் செய்யப்பட்ட இடம் என்ற பகுதியில் கலிகமுவ பிரதேச சபையின் சம்பந்தப்பட்ட தகனம் செய்யுமிடத்தின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி குறித்த பிரேதத்தினை தகனம் செய்வதற்குப் பொறுப்பேற்றல் அல்லது தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரமொன்றினை வழங்குவதை தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் செய்தல் கூடாது.*

*3. (அ) பிரேதங்களை தகனம் செய்வதற்காக அறவிடப்படவேண்டிய கட்டணங்களை கலிகமுவ பிரதேச சபையில் பிரேரணை அங்கீகாரம் மூலம் வருடாந்தம் விதிக்கலாம். அவ்வாறு விதிக்கப்படுகின்ற கட்டணங்களை பிரதேச சபை தேவை எனக் கருதுகின்ற சந்தர்ப்பங்களில் திருத்தங்கள் செய்யலாம்.*

*(ஆ) மேலே (அ) பந்தியின்படி விதிக்கப்படுகின்ற அல்லது காலத்திற்குக் காலம் திருத்தப்படுகின்ற கட்டணங்களை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டியதுடன், தகனம் செய்யுமிடத்தினை ஒதுக்கிக்கொள்வதற்காக விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கின்ற இடத்தில் மற்றும் தகனம் செய்யுமிடத்தில் தெளிவாக தெரியக்கூடியவாறு காட்சிக்கு வைத்தல் வேண்டும்.*

*(இ) பிரேதத்தினை தகனம் செய்ய அறவிடப்படுகின்ற கட்டணங்களை இங்கு முதலாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வகுப்பீட்டின்படி விதிக்கலாம்.*

(ஈ) சபையில் பணியாற்றிய அல்லது தற்போது பணியாற்றுகின்ற எவரேனும் ஒரு தலைவர், உப தலைவர் அல்லது சபை உறுப்பினர் அல்லது சபையின் பணியாளர் ஒருவரின் பிரேதத்தினை தகனம் செய்வதற்காக கட்டணங்கள் அறவிடப்பட மாட்டாது.

(உ) பிரேதம் ஒன்றினை தகனம் செய்வதற்காக தகனம் செய்யுமிடத்திற்கு ஒப்படைத்ததன் பின் தகனம் செய்யும்போது அல்லது தகனம் செய்வதற்கு முன்பு தகனம் செய்யுமிடத்தின் இயந்திரங்களில் தொழில்நுட்பக் கோளாறு அல்லது மின் தடைப்படுவதன் மூலம் பிரேதத்தினை தகனம் செய்வதற்கு இயலாது போனால் குறித்த பிரேதத்தினை அடக்கம் செய்யும் அதிகாரம் சபையின் தலைவரினுடையதாகும்.

4. 2 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமொன்றினைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்ற (இதனகத்துப்பின்னர் "விண்ணப்பதாரர்" என அறிமுகப்படுத்தப்படுகின்ற) எவரேனும் ஒருவர் இங்கு கீழே காட்டப்பட்டுள்ள ஆவணங்களுடன் இங்கு இரண்டாம் அட்டவணைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவமொன்றினை தலைவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(அ) மரணித்த நபர் மற்றும் விண்ணப்பதாரருக்கிடையிலான உறவை உறுதிசெய்துகொள்வதற்காக-

(i) விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ் ;
(ii) மரணித்தவரின் பிறப்புச் சான்றிதழ் ;
(iii) விண்ணப்பதாரர் வசிக்கின்ற பிரதேச கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்.

(ஆ) மரணித்த நபரின் மரணம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் வழக்கு கட்டளைகள் விதிகள் சட்டத்தின்கீழ் விசாரணையொன்று நடாத்தப்பட்டிருந்தால் குறித்த விசாரணையை மேற்கொண்ட நீதிவான் அல்லது திடீர் மரண விசாரணை அதிகாரியினால் பிறப்பு மற்றும் மரணங்களைப் பதிவுசெய்யும் சட்டத்தின் 41(இ) பந்தியின்கீழ் பிரேதத்தினைத் தகனம் செய்வதற்கான அனுமதி வழங்கி வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லது பிறக்கும்போதோ மரணித்துப் பிறந்த சவமொன்றாக இருந்தால் பிறப்பு மற்றும் மரணப் பதிவுச்சட்டத்தின் 43(ஆ) பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் ; மற்றும்

(இ) மரணித்த நபரின் மரணப் பதிவுச்சான்றிதழ்.

5. பிரேதம் ஒன்றினைத் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் ஒன்றினை வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவம் ஒன்றிற்கு அனுமதிப்பத்திரமொன்றினை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டால் அவ்வாறான விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கின்ற ஒழுங்கிற்கேற்ப இங்கு இரண்டாம் அட்டவணைப்படுத்தல் தலைவரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கடமையாகும். இவ்விடாப்பு விண்ணப்பப்படிவங்களைப் பொறுப்பேற்கும் கலிகமுவ பிரதேச சபை அலுவலகத்தில் பேணப்படுதல் வேண்டும்.

6. சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்திற்கேற்ப பிரேதமொன்றினைத் தகனம் செய்வதற்காக பொறுப்பேற்கத் தீர்மானிக்கப்பட்டால் முதலாம் அட்டவணைப்படி விதிக்கப்பட்ட குறித்த கட்டணத்தினை அறவிட்டதன் பின் தலைவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் அதற்கான அனுமதிப்பத்திரத்தினை விண்ணப்பதாரருக்கு வழங்குதல் வேண்டும். குறித்த அனுமதிப்பத்திரத்திற்கேற்ப தகனம் செய்யவேண்டிய பிரேதத்தினை தகனம் செய்யுமிடப் பொறுப்பாளரிடம் கொண்டுவந்து ஒப்படைக்கவேண்டிய திகதி மற்றும் நேரத்தினை குறித்த அனுமதிப்பத்திரத்தில் தெளிவாகக் குறித்திருத்தல் வேண்டும்.

7. ஏதேனும் ஒரு காரணத்தினால் தகனம் செய்வதற்காக பிரேதத்தினை பொறுப்பேற்காவிட்டால் தலைவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் அதுபற்றி அதற்கான காரணங்களுடன் உடனடியாக விண்ணப்பதாரிக்கு எழுத்துமூலமாக அறிவித்தல் செய்தல் வேண்டும்.

8. தகனம் செய்யுமிடத்தில் தகனம் செய்வதற்காக வாரத்தில் ஒவ்வொரு நாளும் மு. ப. 7.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரையிலான கால எல்லையினுள் பிரேதங்கள் பொறுப்பேற்கப்படும்.

9. வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னர் பிரேதத்தினைத் தகனம் செய்யுமிடப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். குறித்த நேரத்திற்கு பிரேதத்தினை ஒப்படைப்பதற்கு தாமதமாவதன் மூலம் விண்ணப்பதாரரின் அல்லது மரணித்த தரப்பினரின் உரிமைகள் உள்ள வேறு எவரேனும் ஒருவருக்கு ஏற்படுகின்ற ஏதேனும் அசௌகரியங்கள் அல்லது நட்டங்கள் விடயமாக கலிகமுவ பிரதேச சபையின் தலைவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பொறுப்பிற்கு உட்படுதல் கூடாது.

10. தகனம் செய்யுமிடத்தில் தகனம் செய்யப்படுகின்ற ஒவ்வொரு பிரேதம் பற்றியும் இத்துணைச் சட்டத்தில் இரண்டாம் அட்டவணைக்கேற்ப விபரங்கள் அடங்கிய ஒரு இடாப்பு தகனம் செய்யுமிட உதவியாளரினால் பேணப்படுதல் வேண்டும்.

11. (அ) ஒவ்வொரு பிரேதமும் தகனம் செய்யப்பட்டு எழுபத்திரண்டு மணித்தியாலங்கள் கழிவதற்கு முன் விண்ணப்பதாரர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவரினால் குறித்த அஸ்தி பொறுப்பேற்கப்படுதல் வேண்டும்.

(ஆ) பிரேதத்தினை தகனம் செய்வதற்காக தகனம் செய்யுமிடத்தினை ஒதுக்கிக்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் பிரேதத்தினை தகனம் செய்ததன் பின் அதன் சாம்பலை வைப்பதற்காக மரணித்தவரின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்பட்ட பாத்திரமொன்று (இறுக்கமாக மூடக்கூடிய மூடியுடன் கூடிய) மரணித்தவரின் நெருங்கிய உறவினர்கள் மூலம் தகனம் செய்யுமிடப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

(இ) தகனம் செய்யுமிடத்திலிருந்து அகற்றப்படுகின்ற சாம்பல் மரணித்தவரின் நெருங்கிய உறவினர்களுக்கன்றி வேறு எந்த நபருக்கும் வழங்குதல் கூடாது.

(ஈ) இருந்தும் விண்ணப்பதாரரின் எழுத்து மூலமான வேண்டுகோளின் மேல் தலைவரின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் குறித்த அஸ்தியை தகனம் செய்யுமிடப் பொறுப்பாளரின் பொறுப்பில் வைத்துக்கொள்ளும் கால எல்லையினை நீடித்துக்கொள்ளலாம்.

(உ) (ஈ) பந்தியின் மூலம் அஸ்தியினை தகனம் செய்யுமிடப் பொறுப்பாளரின் பொறுப்பில் வைத்துக்கொள்ள நீடிக்கும் கால எல்லை தகனம் செய்த தினத்திலிருந்து இரண்டு கிழமைகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

(ஊ) அவ்வாறு அஸ்தியினை அகற்றிக்கொள்வதற்கு வழங்கப்பட்ட கால எல்லை முடிவடைந்த பின்பும் அகற்றப்படாத அஸ்தியினை அகற்றுவதற்கு கலிகமுவ பிரதேச சபை தலைவர் அல்லது தகனம் செய்யுமிடப் பொறுப்பாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(எ) எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவரினால் பொறுப்பேற்கப்படாத அஸ்தியினை தகனம் செய்யுமிட வளவில் அல்லது ஏதேனும் ஒரு மயானத்தில் புதைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் கலிகமுவ பிரதேச சபை தலைவரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பொறுப்பாகும்.

(ஏ) தகனம் செய்யுமிடத்திலிருந்து அகற்றப்படுகின்ற சாம்பல் 11(ஆ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கேற்ப வழங்கப்பட்டுள்ள பாத்திரத்தில் இட்டு பத்திரமாக குறித்த விடயத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரிவில் அல்லது அறையில் தகனம் செய்யுமிடப் பொறுப்பாளரினால் வைப்பிலிட்டு வைக்கப்படுதல் வேண்டும்.

12. (அ) எவையேனும் தகனம் செய்யுமிடத்தில் தகனம் செய்யும் பெட்டியினுள் பிரேதத்தினை உட்படுத்தி அதன் பாதுகாப்புக் கதவினை மூடியதன்பின் பெட்டி வைக்கப்பட்டுள்ள பிரதேசத்திற்கு தகனம் செய்யுமிடப் பொறுப்பாளர் அல்லது அவரின் உதவியாளர் ஒருவர் அல்லாத எவரும் உட்பிரவேசித்தல் கூடாது.

(ஆ) தலைவரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் அல்லது தகனம் செய்யுமிடப் பொறுப்பாளரின் அனுமதி இன்றி எவரும் தகனம் செய்யுமிட வளவிற்கு உட்பிரவேசித்தல் கூடாது.

(இ) (ஆ) பந்தியில் எது கூறப்பட்டிருந்தாலும்-

(i) பிரேதம் ஒன்றினை தகனம் செய்வதற்கு எவரேனும் ஒருவர் அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றிருந்தால் பிரேதத்தினை தகனம் செய்வதற்காக ஒப்படைப்பதற்கு அவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நபருடன் குறித்த சந்தர்ப்பத்திற்குச் சமுகமளிக்கின்ற வேறு எவரேனும் ஒரு நபர் அல்லது பலர் மற்றும்

(ii) தகனம் செய்யப்பட்ட எவையேனும் ஒரு பிரேதத்தின் அஸ்தியினைப் பெற்றுக்கொள்வதற்காக குறித்த தினத்தில் அல்லது அத்திகதிக்கு முன் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டுள்ள நபர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட முகவருடன் வருகின்ற வேறு எவரேனும் ஒருவர் தகனம் செய்யுமிட வளவிற்கு உட்பிரவேசிக்க அங்கீகாரம்பெற்ற நபர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஈ) இத்துணைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் சந்தரப்பத்தில் ஏற்படுகின்ற எவையேனும் ஒரு சிக்கலின்போது தலைவரின் தீர்மானம் இறுதியான தீர்மானம் ஆகும்.

இத்துணைச் சட்டத்தினை மீறினால் மற்றும் இது விடயமாக குறித்த நீதி அதிகாரமுள்ள நீதிமன்றமொன்றின் மூலம் தவறிற்குக் குற்றவாளியாக்கப்பட்டதன் பின் ரூபா எழுநூற்றைம்பதிற்கு மேற்படாத தண்டத்திற்கு உட்படுதல் வேண்டும். மேலும் குறித்த தவறிற்குத் தொடர்ந்தும் குற்றவாளியாக்கப்படுமிடத்து குறித்த தவறைப் புரிகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ஒரு நாளைக்கு ரூபா 250 இற்கு மேற்படாத தண்டத்திற்கும் குறித்த நபர் உட்படுதல் வேண்டும்.

13. தகனம் செய்யுமிட வளவினுள்-

(அ) சமாதானத்திற்குப் பங்கம் ஏற்படும் வகையில் நடத்தல் ;

(ஆ) தகனம் செய்யுமிட வளவினுள் இருக்கின்ற கலிகமுவ பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு நட்டங்கள், சேதங்களை ஏற்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு முயற்சித்தல் ;

(இ) தகனம் செய்யுமிடப் பொறுப்பாளர் அல்லது அவரின் எவரேனும் ஒரு உதவியாளரின் கடமைகளுக்குத் தடங்கல் செய்தல் ;

(ஈ) தகனம் செய்யுமிட வளவினுள் அலங்காரங்கள் செய்தல் மற்றும் அறிவித்தல்களை ஒட்டுதல் கூடாது ;

(உ) தகனம் செய்யுமிடத்தினை ஒதுக்குகின்ற ஒருவரினால் எவையேனும் ஒரு சொத்திற்கு அல்லது கட்டிடத்திற்கு அல்லது உபகரணங்களுக்கு நட்டங்கள் ஏற்பட்டால் தலைவர் விதிக்கின்ற மதிப்பீட்டுப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு தகனம் செய்யுமிடத்தினை ஒதுக்கிக்கொள்கின்றவர்கள் சம்மதித்தல் வேண்டும்.

14. (அ) பிரேதங்களை தகனம் செய்வதற்கு உகந்த நிலையில் தகனம் செய்யுமிடத்தினைப் பராமரித்தல் மற்றும் நடாத்துதல் கலிகமுவ பிரதேச சபைத் தலைவரின் கடமையாதல் வேண்டும் ;

(ஆ) தகனம் செய்யுமிடத்தினை மீள் நிர்மாணம் செய்தல் அல்லது பராமரிப்பு செய்தல் விடயமாக குறித்த தகனம் செய்யுமிடத்தினை மூடுவதாக இருந்தால் அது பற்றிய ஒரு அறிவித்தலை மும்மொழிகளிலும் பிரேதத்தினை தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் அலுவலகத்தில் மற்றும் தகனம் செய்யுமிட வளவிற்கு உட்படுகின்ற இடத்தில் தெளிவாக தெரிபடக்கூடிய விதத்தில் காட்சிக்கு வைத்தல் கலிகமுவ பிரதேச சபைத் தலைவரின் கடமையாகும்.

15. சொற்கள் சம்பந்தமாக வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி இப்பிரிவின் துணைச் சட்டங்களில்–

"தகனம் செய்யும் சிறு அறை" எனத் தகனம் செய்வதற்காக பிரேதத்தினை வைக்கின்ற சிறிய அறை மற்றும் குறித்த அறைக்கு வெளியால் அமைக்கின்ற வெளி அறையினையும்,

"தகனம் செய்யுமிட வளவு" என முழுமையாக தகனம் செய்யுமிடம் மற்றும் அதற்குச் சொந்தமான பூமியையும்,

"தகனம் செய்யுமிடப் பொறுப்பாளர்" என குறித்த காலத்தில் கலிகமுவ பிரதேச சபை தகனம் செய்யுமிடம் மற்றும் அதன் விடயங்களுக்குப் பொறுப்பாக இருப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்கின்ற எவரேனும் ஒரு பணியாளையும்,

"அஸ்தி" என எவையேனும் ஒரு பிரேதத்தினை தகனம் செய்ததன் பின்பு பிரேதம் மற்றும் அதனை வைத்திருந்த ஏதேனும் ஒரு பெட்டியில் எரியாமல் மீதியாகும் ஏதேனும் ஒரு திரவியமும்,

"பிரேதம்" என மரணித்த எவரேனும் ஒரு நபரின் பூரணமான பிரேதம் அல்லது பிறக்கும்போதே இறந்து பிறக்கின்ற பிரேதம் ஒன்று அல்லது எவையேனும் ஒரு பிரேதத்தின் ஏதேனும் ஒரு பகுதியையும்

குறிக்கும்.

16. இத்துணைச் சட்டத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலப் பிரதிகளில் ஒவ்வாத ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் சிங்களப் பிரதி வலுவுள்ளதாக இருக்கும்.

### *முதலாம் அட்டவணை*

### தகனம் செய்யமிடத்தினை உபயோகிக்கும்போது அறவிடுகின்ற கட்டணங்கள்

| | | ரூபா ச. |
|---|---|---|
| 1. | அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற ஒருவரின் பிரேதத்தினை தகனம் செய்வதற்கு | 5,000 0 |
| 2. | அதிகார எல்லைக்குள் வெளியில் வசிக்கின்ற ஒருவரின் பிரேதத்தினை தகனம் செய்வதற்கு | 6,000 0 |

### *இரண்டாம் அட்டவணை*

(இரண்டு பிரதிகளாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)

### கலிகமுவ பிரதேச சபையின் தகனம் செய்யுமிடத்தில் பிரேதம் ஒன்றினை தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தல்

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :--------.

தொலைபேசி இலக்கம் :--------.

முகவரி :--------.

தேசிய அடையாள அட்டை இல. :--------.

கிராம அலுவலர் பிரிவு மற்றும் இல. :--------.

2. மரணித்தவரின் முழுப்பெயர் :--------.

ஆண்/பெண் :--------.

வசித்த இடத்தின் முகவரி :--------.

கிராம அலுவலர் பிரிவு மற்றும் இல. :--------.

3. மரணித்தவருக்கும் விண்ணப்பதாரிக்கும் இடையில் உள்ள உறவு :--------.
(உறுதி செய்வதற்கு 4 ஆம் துணைச் சட்டத்தின் (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழொன்றை இணைக்குக.) :--------.

4. இறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பதிவு இலக்கம் மற்றும் திகதி (இறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதியை இணைக்குக.) :--------.

5. இறப்புப் பதிவாளரின் பெயர் மற்றும் பிரிவு :--------.

6. மரணத்திற்கான காரணம் :--------.

7. மரணம் சம்பந்தமாக மரண விசாரணை ஒன்று நடாத்தப்பட்டிருந்தால் (4 ஆம் துணைச் சட்டத்தில் (ஆ) பந்தியில் காட்டப்பட்டுள்ள சான்றிதழை இணைக்கவும்.) :--------.

விசாரணை அலுவலரின் பெயர் மற்றும் பதவி :--------.

விசாரணையை நடாத்திய திகதி :--------.

விசாரணை அலுவலரின் அவதானிப்புக்கள் :--------.

பிரேதத்தினை தகனம் செய்வதற்கு விசாரணை அலுவலர் அனுமதி வழங்கியுள்ளாரா ? :--------.

8. தகனம் செய்வதற்கு வேண்டியுள்ள திகதி மற்றும் நேரம் (விருப்பமான ஒழுங்கின்படி) :

| | திகதி | நேரம் |
|---|---|---|
| (i) | 20 ................................................ | .......................................................... மணி |
| (ii) | 20 ................................................ | .......................................................... மணி |
| (iii) | 20 ................................................ | .......................................................... மணி |
| (iv) | 20 ................................................ | .......................................................... மணி |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையெனவும் சரியானவை எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் முழுப்பொறுப்பினையும் தான் ஏற்றுக்கொள்வதாக மேலும் அறிவித்தல் செய்கின்றேன். சம்பந்தப்பட்ட சான்றிதழ்கள் அனைத்தும் இணைக்கப்பட்டுள்ளன.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**மூன்றாம் அட்டவணை**

திரு./ திருமதி/ செல்வி ..................................................

**பிரேதமொன்றினைத் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குவதை நிராகரித்தல்**

உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மறுபக்கத்தில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அனுமதிப்பத்திரமொன்றை வழங்குதல் கீழே காட்டப்பட்டுள்ள காரணங்களுக்காக நிராகரிக்கப்படுவதாக வருத்தத்துடன் அறிவிக்க விரும்புகிறேன்.

1. ..................................................................................
2. ..................................................................................
3. ..................................................................................
4. ..................................................................................
5. ..................................................................................

----,
கலிகமுவ பிரதேச சபையின்
உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி :----.

----,
தகனம் செய்யுமிடப் பொறுப்பாளர்,
கலிகமுவ பிரதேச சபையின் தகனம் செய்யுமிடம்.

### நான்காம் அட்டவணை

### பிரேதமொன்றினை தகனம் செய்வதற்கு வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம்

(அ) ................................................ என்பவரின் பிரேதம் 20......................................... மாதம் ................................. ஆந் திகதி முற்பகல்/பிற்பகல் ......................................... மணிக்கு .................................... தகனம் செய்யுமிடத்தில் தகனம் செய்வதற்கு இத்தால் அனுமதி வழங்குகின்றேன். மறுபக்க விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ள தகவல்கள் இத்துணைச்சட்டத்தில் 6 ஆம் பிரிவின் இடாப்பில் பதியப்பட்டுள்ளது.

(ஆ) ................................................... 20............................................... ஆந் திகதிய ............................................. இலக்க பற்றுச்சீட்டின் மூலம் ரூபா ..................................................... அறவிடப்பட்டுள்ளது.

(இ) இந்த அனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 10 ஆம் துணைச்சட்டத்தின்படி சம்பந்தப்பட்ட அட்டவணையில் குறிக்கப்பட்டதன்பின் பிரேதத்தினை தகனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

(ஈ) அனுமதிப்பத்திர இடாப்பில் தொடர் இலக்கம் ........................................................... ஆகும்.

----,
தலைவர்,
கலிகமுவ பிரதேச சபை.

திகதி :----.

### ஐந்தாம் அட்டவணை

### கலிகமுவ பிரதேச சபையின் தகனம் செய்யுமிடத்தில் பிரேதத்தினை தகனம் செய்வதற்கு வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திர இடாப்பு

| தொடர் இலக்கம் | மரணித்தவரின் பெயர் | தேசிய அடையாள அட்டை இலக்கம் | ஆண்/பெண் | அனுமதிப்பத்திர இடாப்பு மற்றும் இலக்கம் | மரணித்த திகதி | மரணப் பதிவுச் சான்றிதழில் பதியப்பட்டுள்ள | | விண்ணப்பதாரர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | இலக்கம் | திகதி | பெயர் | மரணித்தவருக்கு உள்ள உறவு |
| 1 | | | | | | | | | |
| 2 | | | | | | | | | |
| 3 | | | | | | | | | |
| 4 | | | | | | | | | |

(**கவனிக்க.**- இங்கு மேல் பகுதியை இடாப்பின் இடப்பக்கத்திலும் கீழ்ப்பகுதியை வலப்பக்கத்திலும் இருக்கும் வகையில் இடாப்பினைத் தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும்.)

| மரணித்தவரின் | | | நீதிவான், திடீர் மரண விசாரணை அதிகாரியின் கட்டளை | அனுமதிப்பத்திர இலக்கம் | பற்றுச்சீட்டின் | | தகனத்திற்காக ஒதுக்கப்பட்ட | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முகவரி | தே. அ. அ. இலக்கம் | கோவை இலக்கம் | திகதி | | இலக்கம் | தொகை<br>ரூபா ச. | திகதி | நேரம் |
| | | | | | | | | |
| | | | | | | | | |

***ஆறாம் அட்டவணை***

**கலிகமுவ பிரதேச சபையின் தகனம் செய்யுமிடத்தில் தகனம் செய்யப்பட்ட பிரேதம் பற்றிய இடாப்பு**

| தொடர் இலக்கம் | மரணித்தவரின் பெயர் | தேசிய அடையாள அட்டை இலக்கம் | ஆண்/பெண் | அனுமதிப்பத்திர இடாப்பு மற்றும் இலக்கம் | மரணித்த திகதி | மரணப் பதிவுச் சான்றிதழில் பதியப்பட்டுள்ள | | விண்ணப்பதாரர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | இலக்கம் | திகதி | பெயர் |
| *1* | | | | | | | | |
| *2* | | | | | | | | |
| *3* | | | | | | | | |
| *4* | | | | | | | | |

(***கவனிக்க.***- இங்கு மேல் பகுதியை இடாப்பின் இடப்பக்கத்திலும் கீழ்ப்பகுதியை வலப்பக்கத்திலும் இருக்கும் வகையில் இடாப்பினைத் தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும்.)

| மரணித்தவரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் | அனுமதிப்பத்திர இலக்கம் | பற்றுச்சீட்டின் | | தகனம் செய்யப்பட்ட | | அஸ்தி கொண்டு செல்லப்பட்ட திகதி |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கம் | தொகை ரூபா ச. | திகதி | நேரம் | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

6-222

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.